**மத்துகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்துகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,301,809 தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 34,000,000 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் ஏனைய வருமானத்தின் கீழ் காண்பிக்கப்படாமல் சேவைக் கட்டணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 2,040,000 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 300,000 தொகையான மூலதன உதவித் தொகை மீளாய்வாண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) நிகழ்ச்சித்திட்டத்தின் 03 இன் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 35,448,117 தொகையான நிர்மாணச் செலவினம் நிகழ்ச்சித்திட்டம் 06 இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மக்கள் வங்கியின் நிலையான வைப்புக் கணக்கு இலக்கம் 070-60-01-00009557-9 இற்குரிய வட்டி வருமானம் ரூபா 1,212,866 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,231,873 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் வட்டி வருமானம் ரூபா 19,007 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,460,097 தொகையான பொருட் பதிவேட்டுப் பொருட்கள் மற்றும் மீளாய்வாண்டின் பதிவேட்டுப் பொருட்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டில் ரூபா 625,361 தொகை சபை வேலைக் கடன்கொடுத்தோர் மீதியொன்று இரு தடவைகள் கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 625,361 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்குரியதாக 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 123,412 தொகையான செலவினம் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 4,478,500 தொகையான கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் மீதிகளுக்கும், அதற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற இடையே ரூபா 5,000,000 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

பலவருட காலமாக அறவிடுவதற்கு இருந்த ரூபா 358,225 தொகையான வீதி விளக்குகள் உதவி மீதி மற்றும் ரூபா 96,000 தொகையான தனியார் பேரூந்து தரிப்பிடக் கட்டண மீதி ஆக இருந்தன.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

ஊழியர் விபரம் மற்றும் பட்டோலைகள் இன்மையினால் ரூபா 10,586,462 தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்துவதற்கு / ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | | |
| (i) 147 மற்றும் 149 ஆம் பிரிவுகள் | 472,773 | 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலாச் சபை அதிகாரச்சட்டத்தின் கீழ் சுற்றுலாச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டலொன்றுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் போது ஆண்டின் பெறுவனவுகளில் ஒரு சதவீதம் வரையிலான அறவிடப்பட வேண்டிய போதிலும், மத்துகம விருந்தினர் விடுதியிலிருந்து அக்கட்டணம் |

| | | | |
|---|---|---|---|
| | | | குறைவாக அறவிடப்பட்டிருந்தது. |
| | (ii) 154(1) ஆம் பிரிவு | - | சபை அதிகாரப் பிரதேசத்தில் காணிகளை ஏலத்தில் விற்பனை செய்யும் போது ஏலமிடப்படுகின்ற காணிகளின் விற்பனை விலையில் ஒரு சதவீத வரியொன்று சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 297,120,250 | சபைக்குச் சொந்தமான சகல காணி, கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 02 ஆந் திகதிய 1996 ஆம் இலக்க வர்த்தமானியின் IV(ஆ) பகுதி | 16,900 | சபையினால் மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வின் பிரகாரம் இனங்காணப்பட்ட 12 அறிவித்தல் பதாதைகளுக்குரிய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 1,616,579 | எந்தவொரு பணிக்காகவும் வழங்கப்பட்ட முற்பணம் உரிய பணி நிறைவுபெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | 7,992,379 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,752,763 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,137,349 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 18,123,000 | 14,281,441 | 12,572,290 | 3,947,643 | 17,403,900 | 15,072,763 | 12,438,691 | 4,724,675 |
| வாடகை | 5,785,300 | 8,537,997 | 8,202,507 | 523,841 | 5,619,500 | 5,395,650 | 4,949,251 | 446,399 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 400,000 | 392,500 | 372,250 | 20,250 | 245,000 | 267,471 | 267,471 | - |

2.2. வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 5,019,438 ஆக இருந்ததுடன் ஆண்டின் போதான சிட்டையிடல் ரூபா 23,211,938 ஆகும். ஆண்டின் போது பெறுவனவுகள், பதிவழித்தல்கள் மற்றும் சீராக்கங்கள் ரூபா 23,739,643 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 4,491,733 ஆகும்.

2.2.3 வீதவரியும் வரியும்

ஆதன வரி

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 4,303,939 தொகையான ஆதனவரி நிலுவை காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 2,249,686 தொகை அதாவது 52 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ஆதனவரி சிட்டையிடல் ரூபா 11,974,964 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 10,211,440 தொகை அதாவது 85 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி வருமானம் ரூபா 4,491,733 ஆக இருந்ததுடன், ஒட்டுமொத்த அறவிடலின் செயல்முன்னேற்றம் 74 சதவீதமாகும்.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரிக்காக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 வாடகை

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 601,184 தொகையான வியாபார நிலைய வாடகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 412,834 தொகை அதாவது 69 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் வியாபார நிலைய வாடகை சிட்டையிடல் வருமானம் ரூபா 5,420,529 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 5,085,039 தொகை அதாவது 94 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 523,841 தொகையான நிலுவையில் ரூபா 188,350 தொகை முன்னைய ஆண்டுக்குரிய நிலுவையாகும்.

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 100,200 தொகையான நிலுவையொன்று காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 35,400 தொகை அதாவது 35 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 121,620 தொகையான நிலுவை வியாபார வரி மீதியில் ரூபா 23,400 தொகை முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவையாகும்.

**2.2.6 ஏனைய வருமானம்**

**அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு பௌதீக பரிசோதனையின் பிரகாரம் 35 அறிவித்தல் பதாதைகளிலிருந்து ரூபா 119,600 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 நீதிமன்றத் தண்டப் பணம்**

**முத்திரைக் கட்டணம்**

2017 ஆம் ஆண்டிற்காக முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் என முறையே ரூபா 34,000,000 மற்றும் ரூபா 1,000,000 தொகைகள் சிட்டையிடப்பட்ட போதிலும், எந்தவொரு தொகையும் மீளாய்வாண்டின் போது கிடைத்திருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதி**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதி விதிக்கப்பட்ட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 03 விடயங்களுக்காக மாத்திரமே உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்டுள்ள உப விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய 08 இலக்குகளுக்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிதிஏற்பாடு வழங்கப்படாமை**

தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சுகாதார ரீதியான மற்றும் நலன்புரிச் சேவைகளுக்காக சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 28 இலக்குகளில் 06 இற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப்படாமை**

2017 ஆம் ஆண்டிற்காக சபை நிதியத்திலிருந்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 42 செயற்திட்டங்களில் 14 செயற்திட்டங்கள் ஆண்டின் இறுதிவிரயிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(உ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

2017 ஆம் ஆண்டிற்காக கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக சபையினால் ரூபா 14,826,603 செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்கோ அல்லது குறைத்துக் கொள்ளும் வகையில் கழிவுப்பொருள் வரியோ விதிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூன் 18 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

(அ) சபைக்கு அறவிட வேண்டிய கடை வாடகை வியாபார வரி, கைத்தொழில் வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பவற்றை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 150(4) மற்றும் 152(4) ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சுடலைக்கூட ஒதுக்கீட்டுக் கட்டணம் மற்றும் சுடலைக் கூடத்தை வாடகைக்கு வழங்குகின்ற சந்தர்ப்பங்களின் போது சலுகை விலையின் அடிப்படையில் வழங்குவதற்காக எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தை உள்ளடக்கிய குழுத் தீர்மானமொன்று சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) பொதுச் சந்தையில் உள்ள 105 கடைகளில் 37 கடைகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் 07 கடைகளுக்கு தற்காலிகமாக மின்சாரம் வழங்கப்பட்டு நாளாந்தம் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

(அ) சபையின் 24 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 174 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 160 ஆகும். அதன் பிரகாரம் 09 பதவிகளில் 14 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணியினருக்கு மேலதிகமாக அமைய அடிப்படையில் 07 பேரும், ஒப்பந்த அடிப்படையில் 03 பேரும் மற்றும் பதிற் கடமை அடிப்படையில் 05 பேரும் சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும், அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் பிரகாரம் 06 பதவிகளுக்கு 12 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) பதவிகளுக்குரிய பணிகளுக்கு புறம்பாக ஏனைய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பதவியணியினர்களின் எண்ணிக்கை 45 ஆகும்.

(இ) சபைக்குச் சொந்தமாக 17 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், நிரந்தர சாரதிகள் 07 பேர் மாத்திரமே இருந்தனர். சாரதிகளின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக சபையின் தொழிலாளர்களிடமிருந்தும் அலுவலக உதவியாளர்களிடமிருந்தும் சேவை பெறப்பட்டிருந்தது.

**3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

**(அ) ஆதன வரி**

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள வெலிப்பென்ன மற்றும் ஹொரவல உப அலுவலகங்களுக்குரிய அபிவிருத்தியடைந்த பிரதேசங்கள் இனங்காணப்பட்ட போதிலும், சபை தீர்மானத்தின் பிரகாரம் அவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களிலிருந்து ஆதனவரி அறவிடுவதற்காக அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆதனவரி வெளியிடப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள மதிப்பீடு செய்யப்படாத ஆதனங்கள் தொடர்பான பட்டியலொன்று சபையில் காணப்படவில்லை.

**(ஆ) ஆதனங்களை வாடகைக்கு வழங்கல்**

(i) மத்துகம பொதுச் சந்தையில் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 38 கடைகளுக்குரிய வாடகை உடன்படிக்கை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 24 உப வாடகையாளர்களுக்காக 2016 நவம்பர் 09 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சட்டரீதியான வாடகை உரித்தை கையளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(2) ஆம் பந்தியின் பிரகாரம் சபை அதிகாரப்பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற சட்டத்தரணிகள் அலுவலகங்களிலிருந்து வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய 05/2013 ஆம் இலக்க மற்றும் 2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் சாரதிகள் மற்றும் அலுவலக

உதவியாளர் சேவையின் ஊழியர்களுக்காக மாத்திரம் சீருடை மற்றும் தையல் கூலி படிகள் உரித்தாகின்றமை காண்பிக்கப்பட்டிருந்தும் 39 சுகாதாரத் தொழிலாளர்களுக்காக ரூபா 156,000 சீருடைப்படி செலுத்தப்பட்டிருந்தது.

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2017 ஆம் ஆண்டிற்காக வழங்குனர்களைப் பதிவுசெய்து கூறுவிலை கோரல் இடம்பெற்றிருந்த போதிலும், அந்தக் கூறுவிலையின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாமல், 2016 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலையின் அடிப்படையில் கொள்வனவுகள் இடம்பெற்றமையால் 2017 ஆம் ஆண்டிற்காக கூறுவிலை கோருவதற்கு செய்திப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 34,931 தொகை சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

**3.7 இனங்காணப்பட்ட நட்டம்**

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது 2016 ஆம் ஆண்டின் கூறுவிலையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டமையால் 06 விடயங்களின் கொள்வனவின் போது ரூபா 496,680 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) மின்சாரப் பொருட்களை விநியோகித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு நலிவாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் பௌதீக பரிசோதனையின் பிரகாரம் ரூபா 126,095 தொகையான 23 வோல்ட் பிரதீப்த (CFC) மின் குமிழ்களில் 207 பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

**3.8 பெறுகைகள்**

**3.8.1 வழங்கல் மற்றும் சேவை**

கோல் கம்பம் இரண்டைக் கொள்வனவு செய்வதாற்காக சபையினால் ரூபா 275,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த கோல் கப்பங்கள் இரண்டும் நியமத்தின் பிரகாரம் காணப்பட வேண்டிய விட்டம் 05 அங்குலமாக இருக்க வேண்டியிருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் போது அதில் 4.45 அங்குல விட்டம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**3.8.2 ஒப்பந்த நிர்வாகம்**

மெத்தோ கெதற மத்துகமவத்த பொது வீதி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 498,835 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், திட்டத்தின் பிரகாரம் 220 மீற்றர் நீளம் காணப்பட்ட வேண்டிய வீதி, பௌதீக பரிசோதனையின் போது 216.3 மீற்றர் மாத்திரமே காணப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களில் 19 சதவீதம் முதல் 320 சதவீதம் வரையும், செலவினங்களில் 01 சதவீதம் முதல் 37 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டமை. |
| | (ii) | கணக்குகளில் குறைத்தும் அதிகரித்தும் பதியப்பட்டிருந்தமை. |
| (ஆ) கடன்கொடுத்தோர் / வைப்புக்கள் | | பட்டோலைகள் தயாரிக்கப்படாமை |
| (இ) ஊழியர் முகாமைத்துவம் | | நியமிக்கப்பட்ட கடமைகளுக்குப் புறம்பான கடமைகளில் ஈடுபடுத்தல் மற்றும் பதவிகளில் வெற்றிடமும் மிகையும் காணப்பட்டமை. |
| (ஈ) பெறுகைகள் | | பெறுகை நடைமுறை பின்பற்றப்படாமை |
| (உ) வருமான நிர்வாகம் | | கடை வாடகை மற்றும் மின்சாரத்திற்கான அறவிடல்கள் தாமதமாகக் காணப்பட்டமை |
| (ஊ) பாதீடு | (i) | பாதீட்டிற்கும் உள்ளபடியான பெறுமதிக்குமிடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை. |
| | (ii) | வருமான மதிப்பீட்டைச் செய்யும் போது நடைமுறைச் சாத்தியமானதாக தயாரிக்கப்படாமை. |